**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.292/2023**

**வா.சா.– 3. மணிகண்டன்– , த/பெ.சவடப்பன்**

**நாள். 07.03.2026**

**வா.சா.3 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா வழக்கில் சாட்சியம் எனக்கு அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் வேடசந்தூர் தாலுகா வரப்பட்டியில் குடியிருக்கிறேன். தாவா வழக்கில் குறியீடு செய்யப்பட்ட புரோநோட்டை பற்றி தெரியும். வழக்கின் விவரங்கள் தெரியும். நான் வரப்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்பதற்கு ஆதார் கார்டு எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.1. புரோநோட்டில் என் கையெழுத்து உள்ளது. நான் எழுதியதும், சாட்சியுமாக கையெழுத்து போட்டுள்ளேன். வாதி முருகேசன் நரிப்பட்டியில் உள்ளார். அவரை எனக்கு 2018 முதல் பழக்கம். நான் JCB டிராக்டர் சொந்தமாக வைத்துள்ளேன். 2018 முதல் வாதி மற்றும் சக்திவேலிடம் வண்டி வாடகைக்கு கொடுத்து வருகிறேன். வாதியும், அவரது மகன் சக்திவேலும் ஒரே வீட்டில் குடியிருக்கிறார்கள். கீழே ஐயாவும், மேலே மகனும் உள்ளார்கள். வாதி பாலசுப்பிரமணி புரோநோட்டை அவரே எழுதிவந்ததாக சொல்லியுள்ளார் என்றால் நான் எழுதியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான்தான் எழுதினேன். புரோநோட்டில் உள்ள விவரங்கள் பாலசுப்பிரமணியன் சொன்னார். புரோநோட்டில் உள்ள விவரங்களை பாலசுப்பிரமணியன் சொன்னார் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். காளிமுத்தை எனக்கு பிரதிவாதி மூலமாக பழக்கம். அவர்தான் அவரை கூட்டி வந்தார். வா.சா.ஆ.1.ல் உள்ள காளிமுத்தின் கையெழுத்துக்கும் அசல்வழக்கு எண். 298/2023 வழக்கின் புரோநோட்டில் உள்ள காளிமுத்தின் கையெழுத்துக்கும் வேறுபாடு உள்ளது என்றால் வேறுபாடு உள்ளது. வா.சா.ஆ.1ல் உள்ள காளிமுத்துவின் கையெழுத்தக்கும், மேலே கண்டுள்ள சங்கதிகளுக்கும் கையெழுத்து வேறு பாடு உள்ளது. 24.01.2021 அன்று பிரதிவாதி உண்மையில் ரூ.65 லட்ச ரூபாய் கடன் வாங்கவில்லை என்றாலும் தாவா வா.சாஆ.1. புரோநோட்டை எழுதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி என் குடும்ப நண்பரோ, உறவினரோ இல்லை. நான் சக்திவேலிடம் நீண்ட காலமாக வேலை செய்வதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் சாட்சி ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.07 18:32:23 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.